யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

FWC

## தவணைப் பரீட்சை, மார்ச் - 2016
## Term Examination, March - 2016

| தரம் :- 12 (2017) | அரசியல் விஞ்ஞானம் | நேரம் :- 3.00 மணித்தியாலங்கள் |
|---|---|---|

பகுதி – I

❖ 1 தொடக்கம் 10 வரையுள்ள வினாக்களிலுள்ள ஐந்து கூற்றுகளுள் நான்கு சரியானவையாகும். சரியான கூற்றுக்களின் தொகுதியைத் தெரிவு செய்க.

(1) அரசியல் விஞ்ஞானம் கவனம் செலுத்தும் கற்கைகளாவன.
A – அரசியல் அதிகாரம் பற்றியாகும்.
B – அரசியல் நிறுவனங்கள் தொடர்பானது.
C – பூவுகை வாழ்க்கையில் இருந்து மக்களை மீட்டெடுத்தல் பற்றியாகும்.
D – சர்வதேச அரசியல் பற்றியாகும்.
E – ஒப்பீட்டு அரசியல் முறை பற்றியாகும்.
1) ABCD 2) BCDE 3) ABDE 4) ACDE 5) ABCE

(2) அரசியலானது.
A – பிரயோக அரசியல் செயன்முறை எனப்படுகின்றது.
B – அதிகாரப் போராட்டமாகும்.
C – அரசியல்வாதிகளும், கட்சிகளும் முக்கியம் பெறுகின்றன.
D – அனுபவம்சார் கலையாகும்.
E – உயர்குழாம் வகுப்பினருக்கு மாத்திரம் உரித்தானதாகும்.
1) ABCD 2) BCDE 3) ABDE 4) ACDE 5) ABCE

(3) அரசு என்பது.
A – அரசியல் ரிதியாக ஒழுங்கமைந்த ஒரு சமூகமாகும்.
B – உறுப்புரிமை கட்டாயமானதாகும்.
C – மொண்டி - வீடியோ ஒப்பந்தததின் மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.
D – அரசின் எஜமான் அரசாங்கமாகும்.
E – இறைமையின் ஒரே உரித்தாளனாகும்.
1) ABCD 2) BCDE 3) ABDE 4) ACDE 5) ABCE

(4) அரசாங்கம் என்பது,
A – அரசின் நடைமுறைக்கரமாகும்.
B – அரசின் எஜமானாகும்.
C – சட்ட, நிறைவேற்று, நீதித்துறைகளை உள்ளடக்கியதாகும்.
D – அரசின் சார்பாக இறைமை அதிகாரத்தைப் பிரயோகிக்கும் முகவராகும்.
E – அரசையும் மக்களையும் இணைக்கும் ஊடகமாகும்.
1) ABCD 2) BCDE 3) ABDE 4) ACDE 5) ABCE



agaram.lk
Scanned with CamScanner

(5) நடத்தைவாதமானது.

A – உண்மையான நிலையை மட்டும் ஆய்வுக்கு உட்படுத்துவதுடன் தேவையற்ற மதிப்பீடுகளில் இருந்து தவிர்ந்திருத்தல்.

B – எதிர்வுகூறக்கூடிய ஆற்றலையுடைய அனுபவம்சார் கோட்பாடுகளைக் கட்டியெழுப்ப முயற்சிக்கிறது.

C – விஞ்ஞான நுட்பமுறைகள் பயன்படுத்தப்படுவதுடன், பண்பாட்டு விடயங்களை தவிர்க்கின்றது.

D – கோட்பாட்டு விடயங்களினூடாக, சமூகவியல்துறைகளை அணுகுகின்றது.

E – அமெரிக்க அரசியலறிஞர்களினால் வளர்த்தெடுக்கப்பட்டது.

1) ABCD 2) BCDE 3) ABDE 4) ACDE 5) ABCE

(6) தேசிய அரசு என்பது,

A – ஆரம்பத்தில் அனைத்து தேசிய அரசுகளும் மக்களாட்சிகளாகவே உருவாகின.

B – 'ஒவ்வொரு தேசமும் ஓர் அரசு மற்றும் முழுத்தேசத்துக்கும் ஓர் அரசு' என்ற மூலக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டமைந்துள்ளது.

C – சர்வதேச அரசியலின் முக்கிய செயற்பாட்டாளராகும்.

D – வெஸ்பாலியா உடன்படிக்கையின் மூலம் சட்ட அந்தஸ்தைப் பெற்றது.

E – திருச்சபையின் அதிகார வீழ்ச்சியும், மானியமுறையின் வீழ்ச்சியும் தோற்றத்திற்கு உதவின.

1) ABCD 2) BCDE 3) ABDE 4) ACDE 5) ABCE

(7) சமூக ஒப்பந்தக் கோட்பாட்டின்படி.

A – மனிதர்களிடையே செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் விளைவாக அரசு தோற்றுவிக்கப்பட்டது என ஏற்றுக்கொள்கின்றது.

B – தோமஸ்கொப்ஸ், ஜோன்லொக், ஜீன் ஜக்ருசோ ஆகியோரால் கட்டியெழுப்பப்பட்ட கோட்பாட்டுவாதமாகும்.

C – தெய்வீக உரிமைக்கோட்பாடு புறக்கணிக்கப்படுவதற்கு அடிப்படையாக அமைந்தது

D – ஐரோப்பாவில் ஜனநாயக மக்களாட்சிக்கு அடிப்படையை வழங்கியது.

E – முழுமையாக அரசின் தோற்றத்தை விளங்கிக்கொள்ள ஏதுவாகின்றது.

1) ABCD 2) BCDE 3) ABDE 4) ACDE 5) ABCE

(8) இறைமைக்கோட்பாடு,

A - அரசை ஏனைய அமைப்புகளில் இருந்து உயர்ந்ததாக காட்டுகின்றது.

B - அரசின் சட்டங்களுக்கு சட்டபூர்வ தன்மையை வழங்குகின்றது.

C - ஜோன்லொக்கினால் கோட்பாட்டு அடிப்படை உருவாக்கப்பட்டது.

D - அரசின் அதிகாரத்தோடு தொடர்புபடுகின்றது.

E - தேசிய அரசுமுறையின் தோற்றத்தையும் இருப்பினையும் நியாயப்படுத்துகின்றது.

1) ABCD 2) BCDE 3) ABDE 4) ACDE 5) ABCE

(9) தாராள ஜனநாயக அரசாங்கமொன்றின் அடிப்படைப் பண்புகளாவன,

A – மத்தியமயப்படுத்தப்பட்ட திட்டமிடல்முறை ஒன்று காணப்படும்.

B – சட்ட, நிறைவேற்று, நீதித்துறைகளுக்கிடையே அதிகாரம் பிரிக்கப்பட்டிருத்தல்.

C – பொறுப்பரசாங்கமுறை காணப்படல்.

D – போட்டிக்கட்சிமுறையும், சுதந்திர அமுக்கக் குழுக்களும் காணப்படல்.

E – சட்டத்தின் ஆட்சி நிலைபெறுதல்.

1) ABCD 2) BCDE 3) ABDE 4) ACDE 5) ABCE

agaram.lk



Scanned with CamScanner

(10) சோசலிச அரசாங்கமொன்றின் அடிப்படைப் பண்புகளாவன,

A – கம்யூனிச சமூகத்தைத் தாபிப்பதற்காகச் செயற்படுதல்.

B – ஊடகத்துறை சுதந்திரம் நிலவுதல்.

C – கட்சியையும், அரசாங்கத்தையும் வேறுபிரிக்க முடியாதிருத்தல்.

D – சமூகப்பலதன்மையை நிராகரித்தல்.

E – ஓர் அனைத்தாண்மை ஆட்சியாக இருத்தல்.

1) ABCD 2) BCDE 3) ABDE 4) ACDE 5) ABCE

❖ 11 – 20 வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றும் வினாவின் தலைப்புடன் தொடர்பான ஐந்து கூற்றுகளைக் கொண்டுள்ளது. அவற்றுள் ஒன்று பிழையானதாகும். பிழையான கூற்றைத் தெரிவு செய்க.

(11) ஒற்றையாட்சி என்பது,

1) ஒற்றை நிர்வாகம், ஒற்றை நீதிபரிபாலனம், ஒற்றைக் குடியுரிமை என்பன பிரதான இயல்புகளாகும்.
2) பல்லின சமூகங்களுக்குப் பொருந்துகின்ற ஆட்சிமுறையாகும்.
3) அரசின் இறைமை அதிகாரம் ஒரு மத்திய அரசாங்கத்தினால் நடைமுறைப் படுத்தப்படும்.
4) உள்ளூர் ஆட்சிமன்றங்களுக்கு அதிகாரத்தைப் பிரித்து வழங்கி பிரதேச மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படும்.
5) செலவு குறைந்ததும், ஒருமைப்பாடு பாதுகாக்கப்படுவதுமான ஆட்சியாகும்.

(12) சமஷ்டி அரசாங்கம் என்பது,

1) மத்திய, மாநில அரசாங்கங்களை உள்ளடக்கியிருக்கும்.
2) யாப்பினூடாக அதிகாரப்பகிர்வு இடம்பெற்றிருக்கும்.
3) மாநில அரசாங்கங்கள் சுயநிர்ணய உரிமை அடிப்படையில் பிரிந்து செல்லலாம்.
4) மத்திக்கும் ஓரத்துக்குமிடையில் இறைமை பங்கீடு செய்யப்பட்டிருக்கும்.
5) தலைமை நீதிமன்றம் சுதந்திரமானதாக காணப்படும்.

agaram.lk

(13) கபினட் அரசாங்கமுறை என்பது,

1) பிரதமர் தலைமையிலான அமைச்சரவை நிறைவேற்றுத்துறையாகும்.
2) பாராளுமன்ற ஆட்சிமுறை எனவும் அழைக்கப்படும்.
3) சட்டத்துறை - நிறைவேற்றுத்துறைகளுக்கிடையில் நெருங்கிய தொடர்பு காணப்படும்.
4) ஜனநாயகத்தன்மை வாய்ந்ததாயினும் வினைத்திறன் அற்றதாகும்.
5) சட்டத்துறையின் பெரும்பான்மை ஆதரவு இதற்கு அவசியமற்றதாகும்.

(14) ஜனாதிபதி அரசாங்கமுறை என்பது,

1) யாப்பினூடாக தனிநபர் அதிகாரம் பெறுவதாகும்.
2) விரைவான தீர்மானங்களை எடுக்க முடிகின்றது.
3) பாராளுமன்றத்தின் நெருக்கீடுகளில் இருந்து விலகியிருக்க முடியும்.
4) நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மூலம் ஜனாதிபதி பதவி நீக்கப்படுவார்.
5) மக்களால் காலத்துக்கு காலம் இடம்பெறும் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்படுவார்.

(15) நீதித்துறையின் பணிகளாவன,

1) சட்டத்துக்கு விளக்கமளித்தல்.
2) சட்டத்துறையை கட்டுப்படுத்துதல்.
3) நீதியை நிலைநாட்டுதல்.
4) யாப்பிற்கு விளக்கமளித்தல்.
5) உரிமைகளைப் பாதுகாத்தல்.



Scanned with CamScanner

(16) அரசியற்கட்சிகள் என்பது,
1) நாட்டு மக்கள் அனைவரையும் உறுப்பினராகக் கொண்டது.
2) அரசியல், பொருளாதார கொள்கைகளைக் கொண்டதாகும்.
3) ஜனநாயக ஆட்சிக்கு அவசியமானவையாகும்.
4) சிதறியுள்ள பொதுசன அபிப்பிராயங்களை ஒன்று திரட்டக்கூடியவையாகும்.
5) மக்களை அரசியல்மயப்படுத்தும் நிறுவனங்களாகும்.

(17) சிவில் சமூகம் என்பது,
1) அரசின் ஆணையதிகாரத்திலிருந்து மக்களின் சிவில் அதிகாரத்தை வேறுபடுத்திக் காட்டப் பயன்படுத்தப்படும் ஓர் எண்ணக்கருவாகும்.
2) இதனூடாக எதிர்பார்க்கப்படும் பிரதான இலக்கு மக்களை அரசியல் ரீதியாகப் பலப்படுத்துவதாகும்.
3) ஒரு கட்சி ஆட்சிமுறை நிலவும் நாடுகளிலும் சுதந்திரமாகச் செயற்படுகின்றது.
4) தாராள ஜனநாயகத்தின் ஓர் அத்தியாவசியப் பண்பாகக் கருதப்படுகின்றது.
5) சமூகத்தின் சுயாதீனக் குழுக்களையும், தனியார் சங்கங்களையும் உள்ளடக்கியது.

(18) நேரடி ஜனநாயக நுட்பங்கள் என்பது,
1) வாக்காளர்கள் இறைமைதிகாரத்தை நேரடியாகப் பிரயோகிப்பதாகும்.
2) ஐரோப்பிய நாடுகளுக்கு மாத்திரமே சிறப்பாகப் பொருந்தக்கூடியதாகும்.
3) இலங்கையில் மக்கள் தீர்ப்பின் மூலம் நிறைவேற்றப்படுகின்றது.
4) ஜனநாயக நாடுகளில் சில அவசிய சந்தர்ப்பங்களில் மாத்திரம் பிரயோகிக்கப் படுகின்றது.
5) சட்டத்துறையின் சுயாதிபத்தியம் பாதிக்கப்படலாம்.

(19) அனைத்தாண்மை அரசாங்கத்தின் பிரதான பண்புகளாவன,
1) ஒரு தனிக்கட்சி சர்வதிகாரம் நிலவுதல்.
2) ஊடகத்துறையில் சுதந்திரம் நிலவாமை.
3) அச்சுறுத்தும் கட்டுப்பாட்டுப் பொறிமுறை ஒன்றைக் கொண்டிருத்தல்.
4) அரசு பொருளாதார விடயங்களில் இருந்து முழுமையாக விடுபட்டிருத்தல்.
5) நெகிழ்ச்சியற்ற அரசியல் கருத்தியல் காணப்படல்.

agaram.lk

(20) மக்கள் சட்டத்துக்கு அடிபணியக் காரணம்
1) பதவியிலுள்ள அரசாங்கத்தை ஆதரிப்பதற்குள்ள விருப்பினாலாகும்.
2) சமூக பொது நன்மைக்கானது என ஏற்றுக்கொள்ளப்படுவதாலாகும்.
3) அரசால் இயற்றப்படுவதும், சட்டமுறையான தளத்தைக் கொண்டிருப்பதும்.
4) தண்டனையை அனுபவிக்க நேரும் என்ற பயத்தினாலாகும்.
5) சமூக அவப்பெயருக்கு உட்பட விரும்பாமையாலாகும்.

❖ 21 - 25 வரையான வினாக்கள் ஒவ்வொன்றும் வினாவின் தலைப்புடன் தொடர்பான 5 கூற்றுகளைக் கொண்டுள்ளது. அவற்றுள் நான்கு கூற்றுகள் சரியானவையாகும். சரியான கூற்றுகளின் தொகுதியைத் தெரிவு செய்க.

(21) தேசம் என்பது,
A - ஒன்றாக கூடிவாழ்வதற்கான சிந்தனையை உடைய மக்கள் கூட்டம்.
B - புரிந்துகொள்ள முடியாத உணர்வின் மூலம் கட்டுண்டவர்கள்.
C - நாட்டின் ஆள்புல எல்லைகளைக் குறிப்பதாகும்.
D - அரசிலுள்ளோர், யாப்பினை உயர்ந்ததாக கருதி மதிப்பர்.
E - அரசில் வாழ்வோர் பல்லின சமூகத்தவராயினும் வேறுபடுத்த முடியாதவர்களாவர்.
1) ABCD 2) BCDE 3) ABDE 4) ACDE 5) ABCE



Scanned with CamScanner

(22) விகிதாசாரப்பிரதிநிதித்துவ தேர்தலின் நன்மைகளாவன,

A - பெரும்பான்மை அபிப்பிராயங்கள் வெளிப்படுத்தப்படும்.

B - சிறிய, சிறுபான்மைக் கட்சிகள் போதிய பிரதிநிதித்துவத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

C - பிரதான கட்சிகளின் தலைமைத்துவ அதிகாரம் குறைக்கப்படும்.

D - கூட்டரசாங்கம் ஏற்படுவதால் அரசியல் உறுதிப்பாடு நிலவும்.

E - வாக்காளர்களின் தெரிவு பரவலடைகின்றது.

1) ABCD 2) BCDE 3) ABDE 4) ACDE 5) ABCE

(23) பொதுசன அபிப்பிராயத்தின் முக்கியத்துவமானது,

A - பொதுக்கொள்கை உருவாக்கச் செயன்முறைக்கானது.

B - தாராள ஜனநாயக பண்பாக கருதப்படுகின்றது.

C - ஆட்சியாளர்கள் சரியானவற்றை தெரிவதற்கு சந்தர்ப்பம் வழங்குகின்றது.

D - கட்சிகளின் பிரச்சாரங்களினூடாக அபிப்பிராயம் கட்டியெழுப்பப்படுகின்றது.

E - அறிவுசார் வாக்காளர்களின் அவசியத்தை உணர்த்துகின்றது.

1) ABCD 2) BCDE 3) ABDE 4) ACDE 5) ABCE

(24) அரசியற் சமூகமயமாக்கற் காரணிகளாவன,

A - பல்தேசிய கம்பனிகளும், சர்வதேச சட்டங்களும்.

B - குடும்பமும் கல்வி நிறுவனங்களும்.

C - ஊடகங்கள் மற்றும் தொழில் அனுபவங்கள்.

D - அரசியற்கட்சிகளும், அரசாங்கமும்.

E - அரசியற் குறியீடுகளும், சமூகவலைத்தளங்களும்.

1) ABCD 2) BCDE 3) ABDE 4) ACDE 5) ABCE

(25) நல்லாட்சி என்பது

A - பொறுப்புக்கூறலும் சட்டத்தின் இறைமையும் வலியுறுத்தப்படுகின்றது.

B - அபிவிருத்தியடைந்த நாடுகளை கட்டியெழுப்பும் ஒரு எண்ணக்கருவாகும்.

C - லஞ்சம், ஊழல் ஒழிப்பு முதன்மையானது.

D - வினைத்திறனும், விளைதிறனும் நிலவ வேண்டும்.

E - ஆட்சிச் செயற்பாடுகளில் மக்கள் பங்கேற்பு வலியுறுத்தப்படுகின்றது.

1) ABCD 2) BCDE 3) ABDE 4) ACDE 5) ABCE

(25 x 2 = 50 புள்ளிகள்)

agaram.lk



Scanned with CamScanner

யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, மார்ச் - 2016

## Term Examination, March - 2016

FWC

தரம் :- 12 (2017) | அரசியல் விஞ்ஞானம்

### பகுதி – II (A)

❖ இப்பகுதியின் எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

1) அரசியல் விஞ்ஞான ஆய்வுக்காகப் பயன்படும் அணுகுமுறைகள் பல காணப்படுகின்றன. அவற்றுள் சமூகவியல் அணுகுமுறையில் பயன்படுத்தப்படும் ஆய்வுநுட்ப முறைகளுள் இரண்டினை எழுதுக.

1. ................................................................................................

2. ................................................................................................

2) அரசின் அதிகாரப் பிரயோகக் கருவிகள் இரண்டைக் குறிப்பிடுக.

1. ........................................ 2. ........................................

3) 'சமூக ஒப்பந்தம்', 'குடியரசு' ஆகிய இரு நூல்களினதும் ஆசிரியர் இருவரினதும் பெயர்களைக் குறிப்பிடுக.

1. ........................................ 2. ........................................

4) அரசாங்கத்தின் அதிகாரத்தைக் கட்டுப்படுத்தும் சட்டரீதியான ஏற்பாடுகள் இரண்டைக் குறிப்பிடுக.

1. ................................................................................................

2. ................................................................................................

5) "அரசியல் என்பது அரசோடு ஆரம்பித்து அரசுடனேயே முடிவுறுகிறது" "அழகியற்கலைக் கற்கையில் காணப்படும் விஞ்ஞானத்தைவிட அதிகமாக வேறு எந்த ஒன்றும் அரசியல் விஞ்ஞானத்தில் காணப்படுவதில்லை" இக்கூற்றுக்களை வெளியிட்ட அறிஞர்களை முறையே குறிப்பிடுக.

................................................................................................

................................................................................................

6) மாக்சியவாதிகளின் கருத்துப்படி முதலாளித்துவச் சமூகம் இரு முரண்பட்ட சமூக வர்க்கங்களைக் கொண்டுள்ளது. அவ் இரு வர்க்கங்களையும் பெயரிடுக.

1. ........................................ 2. ........................................

7) அரசியற் கட்சிகளை மொரிஸ்டுவேஜர் இரு வகைப்படுத்துகின்றார். அவ்விரு வகைப் பாட்டையும் குறிப்பிடுக.

1. ........................................ 2. ........................................

8) "விகிதசமப் பிரதிநிதித்துவம் இரு முறைகளில் பயன்படுத்தப்படுகின்றது" அவ்இரு முறைகளையும் குறிப்பிடுக.

1. ................................................................................................

2. ................................................................................................

9) ஜீன்போடின், சாள்ஸ்மொன்டஸ்கியூ ஆகியோரால் முன்வைக்கப்பட்ட கோட்பாடுகளை முறையே தருக.

................................................................................................

................................................................................................

10) அரசியல் நடத்தையில் பல்வேறு காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. அவற்றுள் இரண்டினைக் குறிப்பிடுக.

1. ................................................................................................

2. ................................................................................................

(10 x 1 = 10 புள்ளிகள்)



agaram.lk

Scanned with CamScanner

யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
Field Work Centre
தவணைப் பரீட்சை, மார்ச் - 2016
Term Examination, March - 2016

FWC

தரம் :- 12 (2017) அரசியல் விஞ்ஞானம்

## பகுதி – II (B)

இரண்டு வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.

1) i) அரசியல் விஞ்ஞானத்தின் பாடப்பரப்பினைச் சுருக்கமாகக் குறிப்பிடுக.
ii) மக்கள் அரசியலைப் படிக்கும் வழிமுறைகளை ஆராய்க.

(2 x 10 = 20 புள்ளிகள்)

2) பாசிச அரசின் பிரதான பண்புகளைப் பரிசீலிக்குக.

(20 புள்ளிகள்)

3) i) உரிமைகள் என்பதால் நீர் விளங்கிக்கொள்வது யாது?
ii) தற்கால அரசுகளில் உரிமைகள் பாதுகாக்கப்படும் வழிமுறைகளைப் பரிசீலிக்குக.

(2 x 10 = 20 புள்ளிகள்)

4) பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினைப் பற்றி பரிசீலிக்குக.
i) யாப்புவாதம்
ii) அமுக்கக்குழுக்களின் பணிகள்
iii) விகிதாசார பிரதிநிதித்துவத்தின் நிறைகளும் குறைகளும்
iv) ஜனாதிபதி அரசாங்க முறையின் நிறைகளும் குறைகளும்

(2 x 10 = 20 புள்ளிகள்)

agaram.lk



Scanned with CamScanner

யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, மார்ச் - 2016
## Term Examination, March - 2016

| அரசியல் விஞ்ஞானம் | புள்ளித்திட்டம் | தரம் :- 12 (2017) |
|---|---|---|

### பகுதி I

| | | | | |
|---|---|---|---|---|
| (1) 3 | (6) 2 | (11) 2 | (16) 1 | (21) 3 |
| (2) 1 | (7) 1 | (12) 3 | (17) 3 | (22) 5 |
| (3) 5 | (8) 3 | (13) 5 | (18) 2 | (23) 5 |
| (4) 4 | (9) 2 | (14) 4 | (19) 4 | (24) 2 |
| (5) 5 | (10) 4 | (15) 2 | (20) 1 | (25) 4 |

### பகுதி II (A)

1) பங்குபற்றற்சோதனை
   நேரடி அவதானிப்பு
   நேர்முகம்
   கேள்விக்கொத்து
   விவகார ஆய்வு
2) சிவில்சேவை
   பொலிஸ்
3) ரூசோ
   பிளேட்டோ
4) 1. அரசியல் யாப்பு
   2. வலுவேறாக்கம்
   3. நீதிப்புனராய்வு அதிகாரம்
5) 1. கார்ணர்
   2. எட்மன்பேக்
6) முதலாளித்துவ வர்க்கம்
   பாட்டாளி வர்க்கம்
7) 1. காடர்கட்சி
   2. மகாஜனக்கட்சி
8) 1. தனிமாற்றுவாக்குமுறை
   2. பட்டியல்முறை
9) 1. இறைமைக் கோட்பாடு
   2. வலுவேறாக்க கோட்பாடு
10) 1. மக்களின் பொருளாதாரம்
   2. மக்களின் சமூகத்தரம்
   3. இனம்
   4. சாதி
   5. கல்வி
   6. ஆர்வங்கள்

### பகுதி – II (B)

1) i) அரசறிவியலின் பாடப்பரப்பு பற்றி ஒருமைத்தன்மை காணப்படவில்லை.
அரசு, அரசாங்கம், அதிகாரம் என்பன முக்கியம் பெற்றாலும் காலத்துக்குகாலம் வளர்ச்சியும் மாற்றங்களும் ஏற்பட்டுள்ளன. அவ்விடயங்களாவன,
1. அரசு மற்றும் அரசாங்கம் பற்றிய கற்கை
2. அதிகாரம் பற்றிய கற்கை
3. அரசியற்கோட்பாடுகளும் தத்துவங்களும்
4. அரசியற்கட்சிகள், அமுக்கக்குழுக்கள் மற்றும் பொதுசன அபிப்பிராயம்
5. சட்டம் பற்றிய கற்கை



agaram.lk
Scanned with CamScanner

6. அரசியல் தாபனங்கள் பற்றிய கற்கை
7. சர்வதேச அரசியலும், சர்வதேச உறவுகளும்
8. பொதுத்துறை நிர்வாகம்
9. கொள்கை விஞ்ஞானம்
10. நடத்தைவாதமும் அதனோடு இணைந்த பகுதிகளும்
11. மோதல் முகாமைத்துவமும் மோதல் தீர்வும்

ii) மனிதன் அரசியலைப் படிப்பதற்கு இரு வழிமுறைகள் உண்டு. அவையாவன.
1. முறைசார் வழிமுறை
2. முறைசாரா வழிமுறை
முறைசார் வழிமுறையில் நிறுவன ரீதியான கல்வி விடயங்களும், முறைசாரா வழிமுறையில் குடும்பம், சமயநிறுவனங்கள், ஊடகங்கள், சமவயதுக்குழுக்கள், அபிப்பிராயத் தலைவர்கள் பொருளாதாரக் காரணிகள், அரசாங்கம், அரசியற் கட்சிகள் என்பன அடங்குகின்றன

2) பாசிச அரசின் பிரதான பண்புகள்
1. கொள்ளை எதிர்ப்பு
2. தர்க்க ரீதியற்ற தன்மை
3. மூடநம்பிக்கை
4. அரசின் தன்னிகரற்ற தன்மை
5. ஆக்கிரமிப்பு தன்மை பொருந்திய தேசியவாதம்
6. போர்ப்பிரியத்தன்மை
7. சர்வதேச சட்டத்தினையும், சர்வதேச வாதத்தினையும் எதிர்த்தல்
8. வன்முறையும் பயங்கரவாதமும்
9. தலைவர்களையும் ஆட்சித்தலைவர்களையும் மதித்தலும் வழிபடுதலும்
10. அரசினால் கட்டுப்படுத்தப்படும் பொருளாதாரமுறை
11. லிபரல் சனநாயகத்தினை நிராகரித்தல்

3) i) பூரண சமூக வாழ்க்கையை அனுபவிப்பதற்கு மனிதனுக்குக் கட்டாயமாக இருக்க வேண்டிய சமூக உரித்துக்களே உரிமைகளாகும். உரிமைகளின் வகைப்பாடு, ஒழுக்க உரிமைகள், சட்ட உரிமைகள் போன்ற விடயங்களை உள்ளடக்கி எழுதப்பட்டிருக்க வேண்டும்.

ii) 1. அரசியல் யாப்பில் உரிமைகள் உள்ளடக்கப்படல்
2. நீதித்துறையினூடான பாதுகாப்பு
3. நீதித்துறையின் சுதந்திரம்
4. சட்டத்தின் ஆட்சி ஏற்றுக்கொள்ளப்படுதல்
5. பொதுச்சேவையும், பொலிஸ்சேவையும் சுதந்திரமாகச் செயற்படல்
6. பொருளாதார நியாயம்
7. சுதந்திரமான ஊடகங்கள்
8. உரிமைகள் பற்றிய விழிப்புணர்வு

4) i) அரசியல் யாப்பின் மூலம் வெளிப்படுத்தப்படும் சட்டமுறையான புற வகைப்புக்கூறச் செயற்படுதல், அரசாங்கமுறையில் யாப்பை உயர் தன்மை பொருந்தியதாக மதித்து பின்பற்றலும் யாப்பனுவாதமாகும். இது பற்றி விளக்கி எழுதப்பட்டிருக்க வேண்டும்.

ii) 1. தனிப்பட்ட நலன்களை மேம்படுத்திப் பாதுகாத்தல்
2. அரசாங்கத்தின் செயற்பாட்டுக்கு ஆதரவளிப்பதைப்போன்று எதிர்ப்பு தெரிவிக்கும் செயற்படல்
3. ஜனநாயக ஆட்சியை பலப்படுத்துதல்
4. அரசாங்கத்திற்கு தகவல்களை வழங்கும் பிரதான மூலாதாரமாக இருத்தல்
5. சமகால சமூக, பொருளாதார, அரசியல் பிரச்சினைகள் பற்றி மக்களுக்கு அறிவூட்டல்

iii) விகிதாசார பிரதிநிதித்துவம் பற்றிய அறிமுகமும், நன்மை, தீமைகளும் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

iv) ஜனாதிபதி அரசாங்க முறை பற்றி அறிமுகஞ்செய்து, அதன் நிறைகள், குறைகள் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.



agaram.lk
Scanned with CamScanner